# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**எண் 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 8.**

**தொலைபேசி: 044-28411376, இணையதளம்: http://www.tnerc.tn.nic.in**


## பொது அறிவிப்பு

1. கடந்த ஆண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், (த.மி.உ.ப.க) 2010–11 ஆம் நிதி ஆண்டிற்கான இறுதி (final) உண்மை நிலையைக் கண்டறிதல் மற்றும் மொத்த வருவாய்த் தேவைக்கான ஒப்பளிப்பு, 2011–12 ஆம் நிதி ஆண்டுக்குரிய வருடாந்திர செயல்திறன் மதிப்பாய்வு, 2012–13 ஆம் நிதி ஆண்டிற்கு மதிப்பீட்டின் அடிப்படையிலான செயற்பாட்டின் ஆய்வு மற்றும் 2013–14 முதல் 2015–16 வரையிலான பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்தின் (Multi year Tariff) படி மற்றும் 2013–14 ஆம் நிதி ஆண்டுக்குரிய மொத்த வருவாய்த் தேவைக்கான கட்டண நிர்ணயம் செய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன் மனு தாக்கல் செய்தது. அதன் அடிப்படையில் அந்த மனு மீது, மாநில ஆலோசனைக்குழு, பொது மக்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை பரிசீலனை செய்த பின் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2013–14 முதல் 2015–16 வரையான இரண்டாவது கட்டுப்பாட்டுக் காலத்திற்கான மொத்த வருவாய்த் தேவை மற்றும் 2013–14 ஆம் நிதி ஆண்டிற்கு வருவாய் பற்றாக்குறை மற்றும் மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்தது.

2. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 64 ஆம் பிரிவின்படி, மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம், ஆணையம் வகுத்த விதிகளின்படி கட்டணத்தை நிர்ணயம் செய்யக் கோரும் மனுவினை தாக்கல் செய்ய வேண்டியது மின் உரிமதாரரின் கடமையாகும். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (மின்கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதி 5–இன்படி மின் உரிமம்தாரர் தமது மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யக் கோரும் மனுவினை ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 30 ஆம் தேதிக்கு முன்போ அல்லது அன்றோ தாக்கல் செய்ய வேண்டும். அதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், 2011–12 ஆம் ஆண்டின் உண்மை நிலையைக் கண்டறிதல் மற்றும் மொத்த வருவாய்த் தேவைக்கான ஒப்பளிப்பு, 2012–13 ஆம் நிதியாண்டிற்கு மதிப்பீட்டின்

அடிப்படையிலான தற்காலிக செயற்பாட்டின் ஆய்வு மற்றும் 2013–14 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டின் ஆய்வு மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் தேவை மற்றும் மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான மனுவினை நவம்பர் மாதம் 30 ஆம் தேதிக்கு முன்போ அல்லது அன்றோ தாக்கல் செய்திருக்க வேண்டும். எனினும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மனுவினை தாக்கல் செய்யவில்லை.

3. மாண்பமை மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நவம்பர் 11, 2011–ஆம் நாளிட்ட அசல் மனு எண் 1–இன் ஆணையில், மாநில ஆணையங்களுக்கு கீழ்க் கண்டவாறு கட்டளையிட்டுள்ளது.

*“ஆண்டு வருவாய்த் தேவைக்கான மனு, உண்மை நிலையைக் கண்டறிதல் வருடாந்திர செயல்திறன் மதிப்பாய்வு ஆகியவற்றை தாக்கல் செய்யும் நிகழ்வில் தாமதமோ, திட்டமிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு மேல் மனுவினை தாக்கல் செய்யாவிட்டாலோ, மாநில ஆணையம் தானே முற்பட்டு மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்ய சட்டத்தின் 64–ஆம் பிரிவிற்கு ஏற்ப மற்றும் கட்டணக் கொள்கை விதி 8.1(7)–இன் படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.”*

4. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள், 2005–இல், ஒழுங்குமுறை விதி 6–இல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

*“(8) உரிமம்தாரர் மின் கட்டண வீத மாறுதல் கேட்டு விண்ணப்பத்தினை உரிய காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை துவங்காதிருக்கிற நேர்வில், ஆணையமானது, தானே முற்பட்டு (suo-motu) மின் கட்டண வீதம் நிர்ணயம் செய்வதற்கான மற்றும் ஒழுங்குமுறை ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை துவங்க வேண்டும்”.*

5. மாண்பமை மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டளைப்படி, தேசிய மின் கட்டணக் கொள்கை மற்றும் 2003–ஆம் ஆண்டின் மின்சார சட்டத்தின் பிரிவு 62 மற்றும் 64–இன் படி அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் படி மற்றும் மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் 2005–இன்

படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தானே முற்பட்டு 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு ஆண்டு வருவாய்த் தேவையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

6. நிதி மறு சீரமைப்புத் திட்டத்தின் தேவைக்கேற்ப, மின்கட்டண வீதத்தினை ஒவ்வொரு ஆண்டும், ஆண்டு வருவாய்த் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் மறுநிர்ணயம் செய்யப்பட வேண்டும். மேற்கண்ட சூழ்நிலையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தானே முற்பட்டு 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு மின்கட்டண வீதத்தினை மற்றும் ஆண்டு வருவாய்த் தேவையினை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆணையத்திற்கு சமர்ப்பித்த தகவல்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளது. ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில், ஆணையம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு முடிவு செய்துள்ளது.

அ. 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டின் செலவுகளை தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தற்காலிக உண்மை நிலை கண்டறிதல் மேற்கொள்ளப்படும்.

ஆ. 2013–14 ஆம் ஆண்டின் ஆண்டு செயற்பாட்டு ஆய்வு மற்றும் 2014–15ஆம் நிதி ஆண்டின், ஆண்டு வருவாய்த் தேவையை, ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில் மற்றும் நிதி ஆண்டு 2011–12 மற்றும் 2012–13க்கு தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

இ. தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வருவாய் பற்றாக்குறை மற்றும் ஒழுங்குமுறை வகைச் சொத்து, தற்காலிகமானது. அதன் உண்மை நிலை வரும் ஆண்டில் அறியப்படும்.

7. ஆகையால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தானே முற்பட்டு, 2011–12 மற்றும் 2012–13ஆம் நிதி ஆண்டிற்கு தற்காலிக உண்மை நிலையைக் கண்டறிதல், 2013–14ஆம் நிதி ஆண்டிற்கு செயற்பாட்டு ஆய்வு செய்தல் மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கு ஆண்டு வருவாய் நிர்ணயம் செய்தல் மற்றும் மின்கட்டண நிர்ணயம்

செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முடிவெடுத்துள்ளதை இதன் மூலம் அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது.

8. ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஆணையம், தற்காலிகமாக மொத்த வருவாய்த் தேவையாக ரூ.39,818 கோடி என நிர்ணயம் செய்துள்ளது மற்றும் 2014–15ஆம் நிதி ஆண்டிற்கான வருவாயாக ரூ. 32,964 கோடி என தற்போது உள்ள மின் கட்டண வீதத்தின் அடிப்படையில் (மின் விற்பனையின் மூலம் வருவாய் மற்றும் மின்கட்டணம் அல்லாத வருவாய்) நிர்ணயம் செய்துள்ளது. மொத்த வருவாய்த் தேவை கூறுகளின் அடிப்படையில் ஆண்டு வருவாய்த் தேவை மற்றும் 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு தற்போதுள்ள மின்கட்டண வீதத்தின்படி வருவாய் கீழ்க்கண்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது. ஆணையம், 2014–15 ஆம் நிதி ஆண்டிற்கு வருவாய் பற்றாக்குறையாக ரூ. 6,854 கோடி என நிர்ணயம் செய்துள்ளது.

**அட்டவணை 1 : 2014–15 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்த் தேவை கூறுகள்படி மற்றும் வருவாய் பற்றாக்குறை**

(ரூ. கோடி)

| விவரங்கள் | ஜூன் 2013 ஆம் ஆண்டின் மின் கட்டண ஆணையில் அனுமதிக்கப்பட்டவை | ஆணையத்தினால் தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டது |
|---|---|---|
| மின் உற்பத்திக்கான செலவுகள் | 8,851 | 12,687 |
| மின்சாரம் கொள்முதலுக்கான செலவுகள் | 17,949 | 17,946 |
| தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டு மின் அனுப்புகைக் கட்டணம் | 2,850 | 2,259 |
| இயக்க மற்றும் பராமரிப்புச் செலவு | 4,068 | 4,304 |
| தேய்மானம் | 435 | 661 |
| நீண்டகால கடன் மூலதனத்தின் மீதான வட்டி | 1,740 | 1,956 |
| பிற பற்றுகள் மற்றும் அசாதாரண இனம் | 26 | 6 |
| நியாயமான வருவாய் / சமவுரிமை பங்கிலிருந்து வருவாய் | 0 | – |
| நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி | 0 | – |
| **மொத்த வருவாய்த் தேவை** | 35,918 | 39,818 |

| | | |
|---|---|---|
| **வருவாய்** | | |
| மின்கட்டண வருவாய் (அரசு மானியம் உட்பட) | – | 32,238 |
| மின்கட்டணம் அல்லாத வருவாய் மற்றும் பிற வருவாய் | 1,021 | 726 |
| **மொத்த வருவாய்** | | 32,964 |
| **வருவாயில் உள்ள பற்றாகுறை** | | 6,854 |

மேற்குறிப்பிடப்பட்ட வருவாய் பற்றாக்குறையான ரூ. 6,854 கோடியினை கருத்தில் கொண்டு ஆணையம், இந்த பற்றாக்குறையை சரிசெய்யும் நோக்கில் பிரிவு வாரியாக அனைத்து மின் நுகர்வோருக்கும் மின் கட்டண வீதத்தினை உயர்த்தும் முடிவினை உத்தேசித்துள்ளது. கீழ்க்கண்ட அட்டவணையில், 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு கூடுதல் வருவாய் மற்றும் திருத்தப்பட்ட வருவாய் பற்றாக்குறை வழங்கப்பட்டுள்ளது. 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்ட மின் கட்டண வீதம் பின்னிணைப்பு I–இல் இணைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: மின் கட்டண வீதம் திருத்தப்பட்ட பிறகு 2014–15– ஆம் நிதி ஆண்டிற்கு திருத்திய வருவாய் பற்றாக்குறை (ரூ. கோடி)**

| விவரங்கள் | ஆணையத்தினால் தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டது |
|---|---|
| **மொத்த வருவாய்த் தேவை** | **39,818** |
| கழிக்க: பிற வருவாய் மற்றும் மின் கட்டணம் அல்லாத வருவாய் | 726 |
| **நிகர வருவாய்த் தேவை** | **39,092** |
| மின் கட்டண வருவாய் அரசு மானியம் உட்பட (தற்போதுள்ள மின் கட்டண வீதத்தின்படி) | 32,238 |
| வருவாய் பற்றாக்குறை (தற்போதுள்ள மின் கட்டண வீதத்தின்படி) | 6,854 |
| மின் கட்டண வீத திருத்தத்தினால் கூடுதல் வருவாய் | 6,805 |
| திருத்தப்பட்ட வருவாய் பற்றாக்குறை (திருத்தப்பட்ட மின் கட்டண வீதத்தின் படி) | **49** |

9. 2014–15 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்த் தேவையின் சுருக்கம் ஆணையத்தின் இணையதளமான www.tnerc.tn.nic.in–இல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மொத்த வருவாய்த் தேவை நிர்ணயம் குறித்த மறுப்புரைகள்/கருத்துரைகளை தாக்கல் செய்ய விரும்பும் நபர் எவரும் அவரது கருத்துரைகளை செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், எண் 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008 என்ற முகவரிக்கு **23–10–2014** அன்று அல்லது அதற்கு முன்பு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ தாக்கல் செய்யலாம்.

10. மாண்பமை ஆணையத்தில் தாக்கல் செய்யப்படும் மறுப்புரைகள்/கருத்துரைகள் மூன்று நகல்களில் இருத்தல் வேண்டும் மற்றும் அந்த மறுப்புரை அனுப்புநரின், முழுப்பெயர், அஞ்சல் முகவரி ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவனம்/கழகம்/மின் நுகர்வோர் வகையினர் சார்பாக மறுப்புரைகள் தாக்கல் செய்யப்பட்டால், மேற்குறிப்பிட்ட வகையில் எந்த வகையைச் சார்ந்தவர் என குறிப்பிடப்பட வேண்டும். மறுப்புரை/கருத்துரைகள் தாக்கல் செய்பவர் தம் கருத்துக்களை நேரில் தெரிவிக்க விரும்புகிறாரா என்பது பற்றியும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். மாண்பமை ஆணையம், இந்த அறிவிக்கை தொடர்பாக பெறப்பட்ட மறுப்புரைகளை ஆய்வு செய்த பின்பு, ஆணையத்தினால் தீர்மானிக்கப்படும் மறுப்புரையாளர்களை ஆணையத்தினால் அறிவிக்கப்படும் நாட்களில் நடைபெறும் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு அழைக்கலாம்.

**செயலாளர்**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.

## பின்னிணைப்பு – I

### உயர் அழுத்த நுகர்வோருக்கான மின்கட்டணம் 2014–15 ஆம் நிதி ஆண்டு

| வரிசை எண். | நுகர்வோர் பிரிவு | கட்டணவீதம் | தற்போதைய மின்கட்டணம் | | உத்தேசிக்கப்பட்டுள்ள மின்கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | கேட்புக் கட்டணம் (ரூ./கி.வா.ஆ/ மாதம்) | மின்திறன் கட்டணம் (காசு/யூனிட்) | கேட்புக் கட்டணம் (ரூ./கி.வா.ஆ / மாதம்) | மின்திறன் கட்டணம் (காசு/யூனிட்) |
| 1 | தொழிற்சாலைகள் | I A | 300 | 550 | 350 | 722 |
| 2 | இருப்புப்பாதை | I B | 250 | 550 | 300 | 722 |
| 3 | அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் | II A | 300 | 450 | 350 | 722 |
| 4 | தனியார் கல்வி நிறுவனங்கள் | II B | 300 | 550 | 350 | 722 |
| 5 | வணிகம் | III | 300 | 700 | 350 | 805 |
| 6 | நீரேற்று நீர்பாசனம் (*) | IV | 0 | 350 | 0 | 722 |
| 7 | தற்காலிக வினியோகம் | V | 300 | 950 | 350 | 1100 |

(*) மின் கட்டணங்கள் தற்பொழுதுள்ள கொள்கையின் அடிப்படையின்படி தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை.

## பின்னிணைப்பு – I

### தாழ்வழுத்த நுகர்வோர்களுக்கான மின்கட்டணம் 2014–15 ஆம் நிதி ஆண்டு

| வரிசை எண். | நுகர்வோர் பிரிவு | மின் கட்டணம் | தற்போதைய மின்கட்டணம் | | உத்தேசிக்கப்பட்டுள்ள மின்கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிலையான கட்டணங்கள் (ரூ./இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை) | மின்திறன் கட்டணங்கள் (காசு / யூனிட்) | நிலையான கட்டணங்கள் (ரூ./இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை) | மின்திறன் கட்டணங்கள் (காசு / யூனிட்) |
| **1** | **வீட்டு உபயோகம்** | **I A** | | | | |
| **மாதம் ஒன்றுக்கு 50 யூனிட் வரை அல்லது இரண்டுமாதத்திற்கு 100 யூனிட்டு வரையிலான நுகர்வு** | | | | | | |
| | இரண்டு மாதத்திற்கு 0–100 யூனிட் | | 20 | 260 | 30 | 300 |
| **மாதம் ஒன்றுக்கு 51 யூனிட் முதல் 100 யூனிட் வரை அல்லது இரண்டு மாதத்திற்கு 101 யூனிட் முதல் 200 யூனிட் வரை நுகர்வு** | | | | | | |
| | இரண்டு மாதத்திற்கு 0–200 யூனிட் | | 20 | 280 | 30 | 325 |
| **மாதம் ஒன்றுக்கு 101 யூனிட் முதல் 250 யூனிட் வரை அல்லது இரண்டு மாதத்திற்கு 201 யூனிட் முதல் 500 யூனிட் வரை நுகர்வு** | | | | | | |
| | இரண்டு மாதத்திற்கு 0–200 யூனிட் | | 30 | 300 | 40 | 350 |
| | இரண்டு மாதத்திற்கு 201–500 யூனிட் | | | 400 | | 460 |
| **மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டு மற்றும் அதற்கு மேல் அல்லது இரண்டு மாதத்திற்கு 501 யூனிட் மற்றும் அதற்கு மேல் நுகர்வு** | | | | | | |
| | இரண்டு மாதத்திற்கு 0–200 யூனிட் | | 40 | 300 | 50 | 350 |
| | இரண்டு மாதத்திற்கு 201–500 யூனிட் | | | 400 | | 460 |
| | இரண்டு மாதத்திற்கு 501 யூனிட் மற்றும் அதற்கு மேல் | | | 575 | | 660 |
| **2** | **குடிசைகள் (மின்னளவி நிறுவும் வரை) (*)** | **I B** | **ரூ. 250/இரண்டு மாதங்களுக்கு (அரசால் மானியமாக முழுவதுமாக வழங்கப்படுகிறது)** | | **ரூ. 290/இரண்டு மாதங்களுக்கு (அரசால் மானியமாக முழுவதுமாக வழங்கப்படும்)** | |
| | **குடிசைகள் (மின்னளவி நிறுவிய பின்) (*)** | | **0** | **430** | **0** | **495** |
| **3** | **மொத்த வினியோகம்** | **I C** | **100** | **400** | **120** | **460** |
| **4** | **பொது விளக்கு மற்றும் குடிநீர்வழங்கல்** | **II A** | **0** | **550** | **120 /கி.வா** | **635** |
| **5** | **அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள்** | **II B (1)** | **100 /கி.வா** | **500** | **120 /கி.வா** | **575** |
| **6** | **தனியார் கல்வி நிறுவனங்கள்** | **II B (2)** | **100 /கி.வா** | **650** | **120 /கி.வா** | **750** |
| **7** | **பொது வழிபாட்டுத் தலங்கள்** | **II C** | | | | |
| | இரண்டு மாதத்திற்கு 120 யூனிட் வரை | | **100 /கி.வா** | 500 | **120 /கி.வா** | 575 |
| | இரண்டு மாதத்திற்கு 120 யூனிட்க்கு மேல் | | | 500 | | 575 |
| **8** | **குடிசை மற்றும் குறுந்தொழில்கள்** | **III A (1)** | | | | |
| | இரண்டு மாதத்திற்கு 0–500 யூனிட் வரை | | **30 /கி.வா** | 350 | **40 /கி.வா** | 400 |
| | இரண்டு மாதத்திற்கு 501 யூனிட் மற்றும் அதற்கு மேல் | | | 400 | | 460 |
| **9** | **விசைத்தறிகள்** | **III A (2)** | | | | |
| | **(i) மாதம் ஒன்றுக்கு 250 யூனிட் வரை அல்லது இரண்டு மாதத்திற்கு 500 யூனிட் நுகரும் நுகர்வோர்** | | | | | |
| | மாதம் ஒன்றுக்கு 0–250 யூனிட் அல்லது இரண்டு மாதத்திற்கு 0–500 யூனிட் **(*)** | | **100 /கி.வா** | 450 | **120 /கி.வா** | 520 |
| | **(ii) மாதம் ஒன்றுக்கு 251 யூனிட் மற்றும் அதற்கு மேல் அல்லது இரண்டு மாதத்திற்கு 501 யூனிட் மற்றும் அதற்கு மேல் நுகரும் நுகர்வோர்** | | | | | |
| | மாதம் ஒன்றுக்கு 0–250 யூனிட் அல்லது இரண்டு மாதத்திற்கு 0–500 யூனிட் **(*)** | | **100 /கி.வா** | 450 | **120 /கி.வா** | 520 |
| | மாதம் ஒன்றுக்கு 251–500 யூனிட் அல்லது இரண்டு மாதத்திற்கு 501–1000 யூனிட் | | | 500 | | 575 |
| | மாதம் ஒன்றுக்கு 501–750 யூனிட் அல்லது இரண்டு மாதத்திற்கு 1001–1500 யூனிட் | | | 500 | | |
| | மாதம் ஒன்றுக்கு 751 யூனிட் மற்றும் அதற்கு மேல்அல்லது இரண்டு மாதத்திற்கு 1501 யூனிட் மற்றும் அதற்கு மேல் | | | 500 | | |
| **10** | **தொழிற்சாலைகள்** | **III B** | | | | |
| | **அனைத்து யூனிட்களுக்கும்** | | **60 /கி.வா** | 550 | **70 /கி.வா** | 722 |
| **11** | **விவசாயம் ( மின்னளவி நிறுவும் வரை) (*)** | **IV** | **ரூ.2500/- குதிரைத் திறன்/ஆண்டிற்கு (அரசால் மானியமாக முழுவதுமாக வழங்கப்படுகிறது)** | | **ரூ.2875/- குதிரைத்திறன்/ஆண்டிற்கு (அரசால் மானியமாக முழுவதுமாக வழங்கப்படும்)** | |
| | **விவசாயம் ( மின்னளவி நிறுவிய பின்) (*)** | | **0** | 280 | **0** | 322 |
| **12** | **வணிகம்** | **V** | | | | |
| | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட் அல்லது இரண்டு மாதத்திற்கு 100 யூனிட் நுகரும் நுகர்வோர் | | **120 /கி.வா** | 430 | **140 /கி.வா** | 495 |
| | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட் அல்லது இரண்டு மாதத்திற்கு 100 யூனிட்டுக்கு மேல் நுகரும் நுகர்வோர். **(எல்லா யூனிட்டுக்கும்),** | | | 700 | | 805 |
| **13** | **தற்காலிக செயல்பாடுகளுக்காக தற்காலிக மின் வழங்கல், கட்டுமானம் மற்றும் ஆடம்பர மின்னொளியூட்டல்** | **VI** | **ரூ.300/கிவா/ மாதம் ஒன்றுக்கு** | 1050 | **ரூ.345/கிவா/ மாதம் ஒன்றுக்கு** | 1210 |

**(*) மின் கட்டணங்கள் தற்பொழுதுள்ள கொள்கையின் அடிப்படையின்படி தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை.**